1. "மன்னிய பெரும!நீ நிலமிசையானே!" என்பது –
   A) வஞ்சித்திணை B) பாடாண்திணை
   C) வாகைத்திணை D) பொதுவியல்

2. பொருத்துக.
   a.நீர் செல நிமிர்ந்த மாஅல் போல 1. திருமுருகாற்றுப்படை
   b.உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு 2. பதிற்றுப்பத்து
   c.பெரங்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய் 3. முல்லைப்பாட்டு
   d.வாழியாத வாழிய பலவே 4. புறநானூறு

   A) a-1, b-3, c-2, d-4
   B) a-2, b-4, c-1, d-3
   C) a-3, b-1, c-4, d-2
   D) a-4, b-2, c-3, d-1

3. யாங்க்னும் ஒத்தியோ? வீங்கு செலல் மண்டிலம் எனச்
   சேரமான் கடுங்கோ வாழியாதனைப் புகழ்ந்தவர்:
   A) முரஞ்சியூர் முடிநாகனார் B) நரிவெரூஉத்தலையார்
   C) பேய்மகள் இளவெயினி D) கபிலர்

4. பொருத்துக:
   a.உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே 1. கபிலர்
   b.நல் நீர்ப் பஃறுளி மணலினும் பலவே 2. பாண்டரங்கண்ணனார்
   c.செருமிகு சேஎய் ! நிற்பாடுநர் கையே 3. நெட்டிமையார்
   d.ஓராங்கு மலைந்தன பெரும நின்களிறே 4. குடபுலவியனார்

   A) a-4, b-3, c-1, d-2
   B) a-3, b-2, c-4, d-1
   C) a-2, b-1, c-3, d-4
   D) a-1, b-4, c-2, d-3

5. ஆராய்ந்தெழுதுக
   1. திருமுருகாற்றுப்படை புலவராற்றுப் படை என்றும் வழங்கப்படுகிறது.
   2. திருமுருகாற்றுப்படையில் திருவேரகம் எனும் சுவாமிமலை அந்தணர் பற்றிய செய்தி கூறப்படுகிறது.
   3. திருமுருகாற்றுப்படையை இயற்றியவர் பெருந்தேவனார்.

   A) 1,3 சரி B) 2,3 சரி C) 1,2 சரி D) 1,2,3 சரி

6. நெஞ்சாற்றுப்படை எனப்படும் நூல்
   A) திருமுருகாற்றுப்படை B) பெரும்பாணாற்றுப்படை
   C) கூத்தராற்றுப்படை D) முல்லைப்பாட்டு

7. ஆராய்ந்தெழுதுக

1. பதிற்றுப்பத்து அகவற்பாவாலான அகப்பொருள்நூல்
2. ஒவ்வொரு பாட்டிலும் பொருளால் சிறப்புடைத்தொடரால் அப்பாட்டின் பெயர் சூட்டப்படுகிறது.
3. ஏழாம் பத்து தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறையை அரிசில் கிழார் பாடியது.
4. இதன் பதிகம் கல்வெட்டுக்களிலமையும் மெய்க்கீர்த்திபோல அமைந்துள்ளது.

A) 1,2 சரி B) 1,3 சரி C) 1,4 சரி D) 2,4 சரி

8. வலிபுணர் யாக்கை வன்கண் யவனர் —எனக்குறிப்பிடும் நூல்

A) முல்லைப்பாட்டு B) புறநானூறு
C) பதிற்றுப்பத்து D) திருமுருகாற்றுப்படை

9. பொருத்துக:

a.இறையென்று வைக்கப்படும் 1. வலி அறிதல்
b.எழுமையும் ஏமாப்புடைத்து 2. கேள்வி
c.ஒற்கத்தின் ஊற்றாம் துணை 3. இறைமாட்சி
d.செல்வர்க்குச் செல்லாதது இல் 4. கல்வி

A) a-3, b-4, c-2, d-1 B) a-4, b-3, c-1, d-2
C) a-2, b-1, c-3, d-4 D) a-1, b-2, c-4, d-3

10. எற்றா விழுமம் தரும் — எது?

A) சொல்வன்மை B) குறிப்பு அறிதல்
C) அவை அஞ்சாமை D) வினைத்திட்பம்

11. பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்—என்றவர்.

A) மாடல மறையோன் B) கோசிகன்
C) மாங்காட்டு மறையோன் D) கவுந்தியடிகள்

12. பொருத்துக:

a.குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள 1. கோவலன்
b.பேதுறவு மொழிந்தனள் மூதறிவாட்டி 2. பாண்டியமன்னன்
c.கூடற்காவதங் கூறுமினீரென 3. மாங்காட்டு மறையோன்
d.என்முதற் பிழைத்தது கெடுகவென்னாயுள் 4. கண்ணகி

A) a-1, b-2, c-3, d-4 B) a-2, b-1, c-4, d-3
C) a-3, b-4, c-1, d-2 D) a-4, b-3, c-2, d-1

13. பொருத்துக:

a.உம்மைச்செய்த செம்மைத் தவத்தன் 1. குறுநிலமன்னர்
b.இந்நாட்டார் அலீர் ஏனையர்போல் வீர் 2. உதயணன்
c.கடுவினையாளரேம் யாம் 3. அயிராபதி
d.போர்மேற் கொண்ட புகற்சியன் புரவலன் 4. உதயணன் தம்பியர்

A) a-3, b-4, c-1, d-2 B) a-2, b-3, c-4, d-1
C) a-4, b-1, c-2, d-3 D) a-1, b-2, c-3, d-4

14. உதயணனின் மகன்

A) விரிசிகன் B) நரவாணதத்தன்

C) விசயவரன் D) உருமண்ணுவா

15. கம்பராமாயணத்தின் இயற்பெயர்

A) இராமாயணம் B) அயோத்திகதை

C) இராமகதை D) இராமாவதாரம்

16. ஆராய்ந்தெழுதுக:

1. கம்பராமாயணத்தில் சுந்தரகாண்டம் நான்காவதாக அமைந்துள்ளது.
2. ஆண்தகை நெஞ்சினின்றும் அகன்றிலை எனச்சீதையிடம்அனுமன் கூறினான்.
3. ‘உருக்கினன் உணர்வைத் தந்தான் உயிர்” என்றாள் சீதை

A) 1,2 சரி B) 2,3சரி C) 1,3 சரி D) 1,2,3 சரி

17. ‘ஆலத்தின் கீழானை நான் கண்ட தாரூரே’ எனமகிழ்ந்தவர்

A) திருஞானசம்பந்தர் B) மாணிக்கவாசகர்

C) வாகீசர் D) சுந்தரர்

18. பொருத்துக:

a. நாமார்க்கும் குடிஅல்லோம் நமனை அஞ்சோம் 1.சுந்தரர்

b. தோடுடைய செவியன் 2.மாணிக்கவாசகர்

c. பித்தா பிறைசூடி 3.சம்பந்தர்

d. தாழ்சடையோன் வரக் கூவாய் 4. அப்பர்

A) a-3, b-4, c-1, d-2 B) a-4, b-3, c-2, d-1

C) a-2, b-1, c-3 d-4 D) a-1, b-2, c-4, d-3

19. எல்லே! இளம்கிளியே இன்னம் உறங்குதியோ”எனத் தோழியரை ஆண்டாள் விளிப்பது—

A) வாவியுள் நீராட B) திருவரங்கன் அடிபரவ

C) மலர்க்காவில் பூக்கொய்யா D) மோர்க்குடமெடுக்க

20. பொருத்துக:

a. அன்று இவ்வுலகம் அளந்தாய் 1. திருமால்

b. சென்று அங்கு தென்னிலங்கை செற்றாய் 2. கிருஷ்ணன்

c. பொன்றச் சகடம் உதைத்தாய் 3. வாமனன்

d. வங்கக் கடல் கடைந்தாய் 4. இராமன்

A) a-3, b-4, c-2, d-1 B) a-4, b-3, c-1, d-2

C) a-2, b-1, c-4, d-3 D) a-1, b-2, c-3, d-4

21. ஆராய்ந்தெழுதுக:
1. வீரமாமுனிவரின் தேம்பாவணிக் காப்பியம் 3615 விருத்தங்களில் அமைந்தது.
2. அக்கோன் அடுத்த நற்குணத்த சீரெல்லாம் ஊட்டினார் வளனுக்கு
3. காமப் போரில் புறங்காட்டி ஓடிடிவனுக்குத் தோல்வி என்பதே சூசையின் வாழ்வு

A) 1,2 சரி B) 2,3 சரி
C) 1,3 சரி D) 1,2,3 சரி

22. வீரமாமுனிவரின் இயற்பெயர்:
A) ராபர்ட் டி நொபிலி
B) கான்ஸ்டான்டின் ஜோசப் பெஸ்கி
C) சீசன் பால்கு
D) இஸ்மத் சன்னியாசி

23. பொருத்துக:

| | |
|---|---|
| a.அலிமா | 1. பிறப்பு |
| b.விலாதத் | 2. இலாஞ்சனை |
| c.விண்ணவர் | 3. யானை |
| d.ஆண்டுக் கணக்கு | 4. குனைன்நகர் |

A) a-1, b-2, c-3, d-4 B) a-2, b-3, c-4, d-1
C) a-3, b-4, c-1, d-2 D) a-4, b-1, c-2, d-3

24. வறுமையும் தீரும் நோய்விட்ட கலும் மனத்தினிற் கவலையும் நீங்கும் — எப்போது?
A) அபுஜகிலின் முகம் பார்த்தால் B) குபிர் படர்ந்தால்
C) திக்கீர் முழக்கம் கேட்டால் D) முகம்மதைக் காண்கில்

25. இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமும் திறப்பட வுரைப்பது:
A) குறத்திப்பாட்டு B) தூது
C) கலம்பகம் D) அம்மானை

26. ஆராய்ந்தெழுதுக:
1. முதல் குறவஞ்சி இலக்கியம் குற்றாலக்குறவஞ்சி
2. கட்டுவிச்சி, அகவன்மகள் என்போர் வசந்தவல்லியின் தோழியர்
3. குற்றாலக்குறவஞ்சியை இயற்றிய திரிகூட ராசப்பக்கவிராயர் மேலகரத்தில் பிறந்தார்

A) 1,2 சரி B) 1,3 சரி C) 2,3 சரி D) 1,2,3 சரி

27. பொருத்துக:

| | |
|---|---|
| a. குலோத்துங்கன் | 1) கலிங்கமன்னன் |
| b. கருணாகரத்தொண்டைமான் | 2) சயதுங்கன் |
| c. கரிகாலன் | 3) சோழர்வரலாறு எழுதியவன் |
| d. அனந்தவர்மன் | 4) திருமாலின் சக்கரம் போன்றவன் |

A) a-4, b-3, c-1, d-2 B) a-3, b-1, c-2, d-4
C) a-2, b-4, c-3, d-1 D) a-1, b-2, c-4, d-3

28. திமிரி வெங்களத்தில் அபயன் வென்றது:

A) அடுபரிப்படையை  B) சேனைவீரரை

C) தேர்ப்படையை  D) யானைப்படையை

29. சிறியவர் மனப் பெருமைபோல் என ஒப்பிடப்பட்டது.

A) சித்திராநதி  B) அகத்தியர்

C) பொருநையாறு  D) காட்டாறு

30. முட்டிவிட்டுக் குனியும் பழங்கதை மூதலிக்கிறாய் என்றது:

A) பண்ணையார்  B) வடிவழகக்குடும்பன்

C) மூத்தபள்ளி  D) இளையபள்ளி

31. கண்ணன் முகமறந்து போனால் இந்தக்
கண்களிருந்தும் பயனுண்டோ?—இடம்பெற்றது.

A) கண்ணம்மா என் காதலி  B) கண்ணன் எனது சற்குரு

C) கண்ணன் என் காதலன்  D) கண்ணன் என் தோழன்

32. அண்ணன்அருச்சுனன் போலெனை ஆக்கிடுவான் — என்றது

A) நகுலன்  B) சகாதேவன்

C) பாரதியார்  D) கண்ணதாசன்

33. ஷெல்லி போல இயற்கை எழிலில் இறைமை கண்டவர்

A) பாரதிதாசன்  B) பாரதியார்

C) சுரதா  D) ச.சோ.பாரதியார்

34. "கன்னற் பொருள்தரும் தமிழே நீ ஓர் பூக்காடு நானோர் தும்பி"
எனப் பாவேந்தர் பாடியது இடம் பெற்ற நூல்

A) அழகின் சிரிப்பு  B) இசையமுது

C) தமிழியக்கம்  D) பொங்கல் வாழ்த்துக் குவியல்

35. ஆராய்ந் தெழுதுக:

1.பெண்மை தண்மை எளிமை எனும் பண்புகளே கவிமணியின் பாடல்களில் அமைந்துள்ளன.

2.கவிமணியின் மருமக்கள் வழிமான்மியம் பழிகரப்பு அங்கதச்சுவை பொருந்தியது.

3.மருமக்கள் வழி மான்மியம் நகைச்சுவை பொருந்தியது

4.மருமக்கள் வழி மான்மியம் நாஞ்சில்நாட்டு வணிகர் பற்றியது.

A) 1,2,3 சரி  B) 2,3,4 சரி

C) 1,2 சரி  D) 3,4 சரி

36. பொருத்துக:

| | |
|---|---|
| a.மலரும் மாலையும் | 1) சுரதா |
| b.என்கதை | 2) கவிமணி |
| c.புரட்சிக்கவி | 3) நாமக்கல் கவிஞர் |
| d.தேன்மழை | 4) பாரதிதாசன் |

A) a-1, b-2 , c-3, d-4  B) a-3, b-4 , c-1, d-2

C) a-4 , b-1 , c-2 , d-3  D) a-2, b-3 , c-4 , d-1

37. வாழ்க்கைத் துணைநலம் நூலின் ஆசிரியர்
- A) மறைமலையடிகள்
- B) திரு.வி.கலியாணசுந்தரனார்
- C) உ.வே.சாமிநாதஐயர்
- D) பாரதியார்

38. ஆராய்ந்தெழுதுக
1. திரு.வி.க கதிரைவேற்பிள்ளையிடம் தமிழ்கற்றார்.
2. திரு.வி.க தேசபக்தன் என்ற செய்தித்தாளைத் தொடங்கினார்
3. திரு.வி.க எழுதிய நூல் கம்பராமாயண ரசனை
4. திரு.வி.க தனித்தமிழில் உரைநடை எழுதியவர்

A) 1,2,3 சரி B) 1,2,4 சரி C) 1,4 சரி D) 3,4 சரி

39. தமிழகம் வளர சிறந்துவிளங்க இளைய சமுதாயம் எழுச்சியுடன் பணிசெய்ய இப்புத்தகம் பயன்படும் என ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் குறிப்பிட்ட நூல்
- A) இந்தியா 2020
- B) அக்னிச் சிறகுகள்
- C) வான வீதியில்
- D) என் இனிய இயந்திரா

40. எஸ்.எல்.வி.விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்திட்டம் தொடங்கியவர்:
- A) மயில்சாமி அண்ணாதுரை
- B) விக்ரம் சாராபாய்
- C) கி.கஸ்துாரி ரங்கன்
- D) ஆ.ப.ஜெ. அப்துல்கலாம்

41. சாகித்ய அகாடமி விருதுபெற்ற நீலபத்மநாபனின் நாவல்:
- A) தலைமுறைகள்
- B) உறவுகள்
- C) இலையுதிர் காலம்
- D) தேரோடும் வீதி

42. கூட்டுக் குடும்ப முறை சிதைந்து அணுக்குடும்பமுறை வந்ததால் ஏற்பட்ட சிக்கல்களை எடுத்துக் கூறும் நாவலாசிரியர்
- A) மேலாண்மை பொன்னுச்சாமி
- B) நீலபத்மநாபன்
- C) சுஜாதா
- D) இமையம்

43. கடைத்தெருக் கலைஞர் என்றழைக்கப்படும் நாவலாசிரியர்
- A) கி.இராஜநாராயணன்
- B) ஜெயகாந்தன்
- C) சுந்தர ராமசாமி
- D) ஆ.மாதவன்

44. பொருத்துக.

| | |
|---|---|
| a. ஆ.மாதவன் | 1. இயல் விருது |
| b. பாவண்ணன் | 2. சாகித்ய அகாதமி விருது |
| c. மேலாண்மை பொன்னுச்சாமி | 3. இலக்கிய சிந்தனைப் பரிசு |
| d. கோவைஞானி | 4. கலைமாமணிவிருது |

- A) a-3, b-4, c-1, d-2
- B) a-4, b-3, c-2, d-1
- C) a-2, b-1, c-3, d-4
- D) a-1, b-2, c-4, d-3

45. "என்னுடைய கதைகளின் பொதுவான மூலதனம் நம்பிக்கை வறட்சி" என்ற சிறுகதை ஆசிரியர்

A) புதுமைப்பித்தன் B) ஜெயகாந்தன்
C) மௌனி D) பா.செயப்பிரகாசம்

46. ஆராய்ந்தெழுதுக:

1. சிற்பியின் நரகம் சிறுகதை புதுமைப்பித்தன் எழுதியது.
2. கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் கதையைப் பின்நவீனத்துவ காலப்படைப்பாகவும் கொள்ளலாம்
3. தமிழ்ச் சிறுகதையின் தந்தை எனப் புதுமைப்பித்தன் புகழப்பட்டார்
4. சாரதையின் தந்திரம் சிறுகதையைப் புதுமைப்பித்தன் எழுதினார்.

A) 1,2 சரி B) 2,3,4 சரி C) 3,4 சரி D) 1,2,3 சரி

47. பொருத்துக:

| | |
|---|---|
| a. பொன்னகரம் | 1. கு.ப.ராசகோபாலன் |
| b. புதிய வார்ப்புகள் | 2. புதுமைப்பித்தன் |
| c. மாட்டுத் தொழுவம் | 3. ஜெயகாந்தன் |
| d. தரங்கிணி | 4. விந்தன் |

A) a-2, b-3, c-4, d-1 B) a-3, b-4, c-1, d-2
C) a-4, b-1, c-2, d-3 D) a-1, b-2, c-3, d-4

48. மாப்பஸான் போன்று புகழ்பெற்றவர் எனப் பாராட்டப்பட்டவர்

A) புதுமைப்பித்தன் B) ஜெயகாந்தன்
C) மௌனி D) ந.பிச்சமூர்த்தி

49. புணர்ச்சியில் "மட்குடம்" என்பது

A) மெய்பிறிதாதல் B) மெய்மிகுதல்
C) மெய்குன்றல் D) இயல்பு

50. உடம்படு மெய்யின் உருபு கொளல் வரையார்— எப்போது?

A) மெய்யுயிர் நீங்கில் தன்னுருவாகும்
B) புள்ளியீற்று முன் உயிர்தனித்தியலாது
C) மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே
D) எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே

51. சொற்சிதர் மருங்கு எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவது :

A) இருமொழியும் ஒட்டி நில்லாது விட்டிசைக்கும் முறை
B) பெயர்,சாரியை, உருபு ஆகிய சொல்லுறுப்புகள் ஒட்டி நடக்கும் வழக்கு
C) சொற்களை நிலைமொழி, வருமொழியாகப் பிரிக்கும் முறை
D) குறிப்பினால் பொருளுடைய புணர்மொழிகள்

52. குணப்பண்பும் தொழிற்பண்புமாகிய பொருட்பண்பை உணர்த்தும் சொல்:

A) பெயர்ச்சொல் B) உரிச்சொல்
C) வினைச்சொல் D) இடைச்சொல்

53. அஃறிணையியற் பெயர் எனத் தொல்காபியர் வழங்கியதை நன்னூலார் கூறுவது:

A) இயற்பெயர்
B) சினைப்பெயர்
C) விரவுப் பெயர்
D) பால்பகா அஃறிணைப்பெயர்

54. ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி :

A) இருபாற்கும் உரித்தே
B) பால்தெரி பிலவே உடன் மொழிப்பொருள
C) பல்வழி நுதலிய நிலைத்தாகும்மே
D) ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலையே

55. முன்னிலை தன்மை யாயீரிடத்தொடும் மன்னாதாகும்

A) வினையெஞ்சு கிளவி
B) இன்மை செப்பல் வேறென் கிளவி
C) வினைமுதற் கிளவி
D) வியங்கோள் கிளவி

56. கரியன் செய்யன் என்பன :

A) பன்மை வினைமுற்று
B) ஒருமை வினைமுற்று
C) குறிப்பு வினைமுற்று
D) அஃறிணைப்பன்மை வினைமுற்று

57. செயப்படு பொருளைச் செய்தது போலத் தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே –எடுத்துக்காட்டு

A) நாளைவரும்
B) எழுதுகோல் எழுதிற்று
C) மழைவரும்
D) ஆறு ஒழுகும

58. ஆராய்ந்தெழுதுக:

1.செய்து எனும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம் ஏனைக்காலச் சொல்லோடு இயையும்

2.விரைவின்கண் எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்த காலத்தோடு மயங்கும்

3.வற்புறுத்தலில் வரும் வினாப் பொருளுடைய வினைச்சொல் எதிர்மறைப்பொருள்தரும்.

4.மிக்கது ஒன்றின்கண்ணே நிகழ்காலமும் எதிர்காலமும் இறந்தகாலத்தோடு மயங்கும்

A) 1,2,4 சரி
B) 1,3,4 சரி
C) 1,2,3 சரி
D) அனைத்தும் சரி

59. தனித்துவரும் நேரசையும் நிரையசையும் :

A) கனிச்சீர்
B) ஈரசைச்சீர்
C) ஓரசைச்சீர்
D) காய்ச்சீர்

60. ஆராய்ந்தெழுதுக :
1. எழுத்து அசைத்து இசை கோடலின் அசை எனப்பட்டது
2. காரிகை என்பது ஒற்றெழுத்து நீங்கிய உயிரும் உயிர் மெய்யுமான முப்பத்திரெண்டெழுத்தாகும்
3. அசை இயைந்து சீர்கொள நிற்றலின் சீர் எனப்பட்டது
4. அசைக்கு உறுப்பாகும் எழுத்துக்களின் பெயர் வேறுபாடு பதின்மூன்று

A) 1,3,4 சரி
B) 1,2,3 சரி
C) 1,4 சரி
D) அனைத்தும் சரி

61. நேர்பும், நிரைபும் ஆகும் என்ப என அசை இலக்கணம் கூறியவர்

A) புத்தமித்திரனார்
B) பல்காயனார்
C) தொல்காப்பியர்
D) அமிதசாகரர்

62. பொதுச்சீர் என்பவை

A) வெண்சீர்
B) நாலசைச்சீர் பதினாறும்
C) இயற்சீர்
D) ஆசிரிய உரிச்சீர்

63. ஒன்றிய வஞ்சித்தளை என்பது

A) கனிமுன் நிரை வருவது
B) கனிமுன் நேர் வருவது
C) காய்முன் நேர் வருவது
D) காய் முன் நிரை வருவது

64 செல்வத்துச் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம் செல்வத்துள்ளெல்லாம் தலை:—இக்குறளில் அமைந்த அணி

A) ஏகதேச உருவக அணி
B) உருவக அணி
C) சொற்பொருள் பின்வருநிலையணி
D) உவமை அணி

65. உவமானம் தனிவாக்கியமாகவும் உவமேயம் தனிவாக்கியமாகவும் அமைந்து உவமஉருபு பெறாமல் வருவது

A) உவமை அணி
B) பாவிகஅணி
C) வேற்றுமை அணி
D) எடுத்துக்காட்டுவமை அணி

66. நெய்தல் திணைக்குரிய சிறுபொழுது

A) யாமம்
B) எற்பாடு
C) வைகறை
D) மாலை

67. நடுவுநிலைத்திணை எனப்படுவது

A) குறிஞ்சி
B) முல்லை
C) நெய்தல்
D) பாலை

68. கொற்றவை நிலையும் அத்திணைப்புறனே’— என்பது

A) குறிஞ்சிக்குப் புறனாகிய வெட்சித்திணை
B) மருதத்தின் புறனாகிய உழிஞைத்திணை
C) முல்லையின் புறனாகிய வஞ்சித்திணை
D) நெய்தலது புறனாகிய தும்பைத்திணை

69. பொருத்துக

| | |
|---|---|
| a. நில்லாவுலகம் புல்லிய நெறித்தே | 1.வெட்சித்திணை |
| b. முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும் | 2.பாடாண்திணை |
| c. ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும் | 3.காஞ்சித்திணை |
| d. காமப்பகுதி கடவுளும் வரையார் | 4.உழிஞைத்திணை |

A) a-4 b-1 c-2 d-3 B) a-2 b-3 c-4 d-1
C) a-3 b-4 c-1 d-2 D) a-1 b-2 c-3 d-4

70. கபாடபுரத்தில் இடைச்சங்கம் அமைத்தவன் எனக் களவியலுரை கூறுபவன்—
A) முதுகுடுமிப்பெருவழுதி
B) வடிவலம்பநின்ற பாண்டியன்
C) பாண்டியன் நெடுஞ்செழியன்
D) நிலந்தரு திருவிற்பாண்டியன்

71. ஓரையாயத் தொண்டொடி மகளிர் எனப்புறப்பாடல் குறிப்பிடும் ஓரை என்பது—
A) சிறுபொழுது B) மகளிர் விளையாட்டு
C) அணிகலன் D) ஓர்மை

72. பரதம், அகத்தியம் நூல்களின் பொருண்மையாகக்கூறப்படுவது
A) ஐந்திலக்கணம் B) இசைத்தமிழ்
C) இயற்றமிழ் D) நாடகத்தமிழ்

73. கடலில் மறைந்த பஃறுளி ஆறு பற்றிக்குறிப்பிடும் நூல்—
A) தொல்காப்பியம் B) புறநானூறு
C) பரிபாடல் D) கலித்தொகை

74. முதன்முதலில் தொகுக்கப்பட்ட தொகைநூல் எனக்கருதப்படுவது
A) அகநானூறு B) புறநானூறு
C) குறுந்தொகை D) ஐங்குறுநூறு

75. எத்திசைச் செலினும் அத்திசைச்சோறே எனப்புலவர் பெருமைபாடி எச்சரித்தவர்
A) நக்கீரர் B) ஒளவையார்
C) கபிலர் D) பரணர்

76. ஆராய்ந்தெழுதுக:
1. பதினெண்கீழக்கணக்கு நூல்களிலே பதினொன்று நீதிநூல்கள்
2. பதினென்கீழக்கணக்கு நூல்களைப் பாடியோர் பதின்மூவர்
3. பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் ஒழுக்கம் உணர்த்துவன.
4. திராவிட சங்கத்து நூல்களே பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்.

A) 1,2 சரி B) 2,3 சரி C) 1,3,4 சரி D) 1,2,4 சரி

77. முத்தொள்ளாயிரம் குறிப்பிடும் மன்னர்கள்
A) சேர,சோழ, பாண்டிய மன்னர்கள்
B) பல்லவ மன்னர்கள்
C) பாண்டிய மன்னர்கள்
D) நாயக்கமன்னர்கள்

78. பொருத்துக

| | |
|---|---|
| a. மாணிக்கவாசகர் | 1. பன்னிரெண்டாம் திருமுறை |
| b. திருநாவுக்கரசர் | 2. எட்டாம் திருமுறை |
| c. சுந்தரர் | 3. உழவாரப்படை |
| d. சேக்கிழார் | 4. திருத்தொண்டத்தொகை |

A) a -4, b-2, c-1, d-3   B) a-1, b-4, c-3, d-2
C) a-3, b-1, c-2, d-4   D) a-2, b-3, c-4, d-1

79. திருமொழி என இராமலிங்கஅடிகளார் பாராட்டிய பாடல் பாடிய சித்தர்
A) திருமூலர்   B) பாம்பாட்டிச்சித்தர்
C) சிவவாக்கியர்   D) பத்திரகிரியார்

80. பொருத்துக

| | |
|---|---|
| a. குலசேகராழ்வார் | 1.பெருமாள் திருமொழி |
| b. திருப்பாணாழ்வார் | 2.பெரியதிருமடல் |
| c. தொண்டரடிப்பொடியாழ்வார் | 3.அமலனாதிபிரான் |
| d. திருமங்கையாழ்வார் | 4.திருப்பள்ளியெழுச்சி |

A) a -1, b-3, c-4, d-2   B) a-2, b-4, c-3, d-1
C) a-4, b-2, c-1, d-3   D) a-3, b-1, c-2, d-4

81. நாகபஞ்சமிகதை என வேறுபெயர் பெற்ற சிறுகாப்பியம்
A) உதயணகுமாரகாவியம்   B) நீலகேசி
C) சூளாமணி   D) நாககுமாரகாவியம்

82. கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய புராணம்
A) திருவிளையாடற்புராணம்   B) கந்தபுராணம்
C) அரிச்சந்திரபுராணம்   D) பெரியபுராணம்

83. ஆராய்ந்தெழுதுக
1. பிற்கால இலக்கணநூலார் கைக்கினை, பெருத்திணைகளைப் புறத்தில் சேர்த்தனர்.
2. நம்பி அகப்பொருள் தஞ்சை வாணன் கோவையை மேற்கோளாகக் காட்டுகிறது.
3. புறம்பொருள் வெண்பாமாலை பன்னிரண்டு திணைகளையுடையது.
4. மாணவர் தாலாட்டு எனச்சிறப்புப்பெயர் பெற்றது நன்னூல்
A) 1,2 சரி   B) 2,3 சரி
C) 1,2,3 சரி   D) அனைத்தும் சரி

84. பொருத்துக

a.கொங்குவட்டார வழக்குச் சொல்அகராதி 1.அ.கா.பெருமாள்
b.வட்டார வழக்குச்சொல் அகராதி 2.பீ.டாக்டர் சீம்தீன்
c.நாஞ்சில்நாட்டு வட்டாரவழக்குச் சொல்அகராதி 3.கி.ராஜநாராயணன்
d.போலிஷ்—ஆங்கிலம் — தமிழ் அகராதி 4.இரவிக்குமார்

A) a -1, b-2, c-3, d-4 B) a-4, b-3, c-1, d-2
C) a-3, b-4, c-2, d-1 D) a-2, b-1, c-4, d-3

85. ‘தமிழ்உரைநூல் நூலடைவு’ நூலின் ஆசிரியர்

A) இரா.காசிராசன் B) ஐசக்சாமுவேல் நாயகம்
C) மு.அ.முகம்மது உசேன் D) தி.வே.கோபாலையர்

86. வரதர் என்ற இயற்பெயர் கொண்ட இடைக்காலப்புலவர்

A) காளமேகப்புலவர் B) புகழேந்திப்புலவர்
C) அருணகிரிநாதர் D) சிவப்பிரகாசர்

87. பொருத்துக:

a. கலம்பகம் 1.செங்கீரை
b. உலா 2.கடைதிறப்பு
c. பிள்ளைத்தமிழ் 3.புயவகுப்பு
d. பரணி 4.தசாங்கம்

A) a -1, b-2, c-3, d-4 B) a-2, b-3, c-4, d-1
C) a-4, b-1, c-2, d-3 D) a-3, b-4, c-1, d-2

88. பொருத்துக:

a. தாயுமான அடிகள் 1.பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை
b. இராமலிங்கஅடிகள் 2.பராபரக்கண்ணி
c. மறைமலைஅடிகள் 3.தமிழ்த்தூது
d. தனிநாயக அடிகள் 4.சீவகாருண்ய ஒழுக்கம்

A) a-2, b-4, c-1, d-3 B) a-3, b-1, c-4, d-2
C) a-4, b-3, c-2, d-1 D) a-1, b-2, c-3, d-4

89. மாதொருபாகன் நாவலின் ஆசிரியர்:

A) கோவிமணிசேகரன் B) பாலகுமாரன்
C) பெருமாள்முருகன் D) ஜெயமோகன்

90. பொருத்துக:

a. வெங்கடேசன் 1.ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்
b. சிவகாமி 2.செடல்
c. இமையம் 3.ஆனந்தாயி
d. தமிழவன் 4.காவல்கோட்டம்

A) a -3, b-1, c-4, d-2 B) a-2, b-4, c-1, d-3
C) a-4, b-3, c-2, d-1 D) a-1, b-2, c-3, d-4

91. வனப்பேச்சி கவிதை நூலின் ஆசிரியர்:
- A) தமிழச்சி தங்கப்பாண்டியன்
- B) குட்டிரேவதி
- C) அனார்
- D) சல்மா

92. ஃப்ராய்டிசம், ஒரு இந்திய வடிவம் பெறுவதை ஜெயகாந்தனிடம் காணமுடியும் என்ற திறனாய்வாளர்:
- A) எஸ்.சந்தானம்
- B) எஸ்.தோத்தாத்ரி
- C) வை.சச்சிதானந்தன்
- D) க.த.திருநாவுக்கரசு

93. பொருத்துக:

a. இலக்கியமும் உளப்பகுப்பாய்வு — 1.செ.சாரதாம்பாள்

b. கவிதைப்படிமம் — 2.தி.சு.நடராசன்

c. திறனாய்வுக்கொள்கைகள் — 3.அ.விநாயகமூர்த்தி

d. பதிப்புப்பார்வைகள் — 4.மு.சுதந்திரமுத்து

- A) a-2, b-3, c-1, d-4
- B) a-1, b-4, c-2, d-3
- C) a-4, b-2, c-3, d-1
- D) a-3, b-1, c-4, d-2

94. சமூகவியலும் இலக்கியமும் நூலின் ஆசிரியர்:
- A) கா.சிவத்தம்பி
- B) கோவைஞானி
- C) பஞ்சாங்கம்
- D) க.கைலாசபதி

95. ஆராய்ந்தெழுதுக:
1. கே.ஏ.குணசேகரனின் ‘பலிஆடுகள்’ கல்வெட்டுச் செய்தியை ஆதாரமாக்கிய முதல் தலித்நாடகம்
2. மு.இராமசாமியின் ‘ஸ்பார்ட்டகஸ்’ நாடகம் அரசியல் சமூக அடிமைத்தன வாழ்வை அம்பலப்படுத்துகிறது.
3. ந.முத்துச்சாமியின் ‘அன்று பூட்டிய வண்டி’ நூல் தெருக்கூத்து பற்றியது.
4. இராம பெரியகருப்பனின் நூல் நாடகக்கலையின் வரலாறு:

- A) 1,2,3 சரி
- B) 1,2,4 சரி
- C) 2,3,4 சரி
- D) அனைத்தும் சரி

96. ‘ஸ்காட்டு எலியட்’, மனிதநாகரிகத்தின் தொட்டில்எனக்குறிப்பிட்ட பகுதி:
- A) சிந்துசமவெளி
- B) தென்தமிழகம்
- C) கோண்டுவானா
- D) லெமூரியாக்கண்டம்

97. ‘கல்வெட்டின் கதை’ நூலின் ஆசிரியர்:
- A) சதாசிவ பண்டாரத்தார்
- B) கி.நாச்சிமுத்து
- C) நடனகாசிநாதன்
- D) சா.குருமூர்த்தி

98. கல்வெட்டில் புத்தக்கம் எனக்குறிப்பிடப்படுவது:
- A) ஒரு ஈழக்காசு
- B) 6 ஈழக்காசுகள்
- C) 12 காசுககள்
- D) 1 காசில் 12ல் ஒரு பங்கு

99. மெய்க்கீர்த்திகள் பொறிக்கும் வழக்கத்தைத்தொடங்கிய அரசன்:

A) மகேந்திரபல்லவன் B) சுந்தரசோழன்

C) முதலாம்இராசராசச்சோழன் D) முதலாம் குலோத்துங்கன்

100. ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்ட நாடு:

A) சோழநாடு B) பல்லவநாடு

C) பாண்டியநாடு D) சேரநாடு

101. ரோமர்களது ரவுலடெட் மட்பாண்டங்கள் அகழ்வாய்வில் கிடைத்த இடம்:

A) கருவூர் B) காவிரிப்பூம்பட்டினம்

C) அலகரை D) உறையூர்

102. தஞ்சை நகரில் புகழ்பெற்ற நூல்நிலையத்தை நிறுவியவர்:

A) செங்கமலதாஸ் B) வெங்கோஜி

C) சிவாஜி D) சரபோஜிமன்னர்

103. சித்திரகாரப்புலி எனும் சிறப்புப்பெயர் பெற்ற மன்னன்:

A) மகேந்திரவர்மன் B) நரசிம்மவர்மன்

C) முதலாம் ராசேந்திரன் D) மூன்றாம் குலோத்துங்கன்

104. ஆராய்ந்தெழுதுக

1. ஆய்வு தொடங்குமுன் கருதுகோள் உருவாதல் வேண்டும்
2. ஆய்வுக்கட்டுரையின் முன்னுரையில் ஆய்வுப்பொருள், எல்லை வரையறை, ஆராய்ச்சி நெறிமுறை, ஆய்வின்வகை,அமைப்பு பற்றிய அறிமுகம் இருக்கவேண்டும்.
3. பின்னிணைப்பு,அட்டவணை வரைபடம் ஆகியன அவ்வளவு முக்கியம் இல்லை.
4. அடிக்குறிப்பில் நூலாசிரியர் பெயரை அப்படியே கொடுக்கவேண்டியதில்லை.

A) 1,3 சரி B) 1,2 சரி C) 2,3,4சரி D) அனைத்தும் சரி

105. பொருத்துக

| | |
|---|---|
| a. தமிழ்இலக்கிய வகையும் வடிவமும் | 1. செ.நாராயணன் |
| b. இலக்கிய வகைமை | 2. ஆ.வேலுப்பிள்ளை |
| c. சமூகவியலும் இலக்கியமும் | 3. கி.ராசா |
| d. சமூகவியலின் அடிப்படைக்கோட்பாடுகள் | 4. ச.வே.சுப்பிரமணியன் |

A) a-1, b-2, c-3, d-4 B) a-4, b-3, c-2, d-1

C) a-3, b-4, c-1, d-2 D) a-2, b-1, c-4, d-3

106. ‘தென்னிந்தியக்குலங்களும் குடிகளும்’ நூல்களின் ஆசிரியர்

A) ஏ.ஏ.டி.லூாயிஸ் B) அனந்தகிருஷ்ணய்யர்

C) எல்.ஏ.கிருஷ்ணய்யர் D) எட்கர்தர்ஸ்டன்

107. பொருத்துக:

a. நாட்டுபுறவியல் களஆய்வு நெறிமுறைகள் 1.ஆறு. இராமநாதன்
b. நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படையில் 2.அரு.மருததுரை
c. பண்பாட்டு மானிடவியல் 3.தே.லூர்து
d. தமிழகநாட்டுப்புற வழிப்பாட்டுக்கூத்துகள் 4.பக்தவத்சல பாரதி

A) a-1, b-3, c-4, d-2 B) a-4, b-2, c-3, d-1
C) a-2, b-3, c-1, d-4 D) a-3, b-1, c-4, d-2

108. தனியரின் குலக்குறியத்துடன் தொடர்பு படுத்தப்படுவது:

A) உயிரியம் (Animatism)
B) நானின் மறுவடிவம் (alter ego)
C) ஆவியியம் (Animism)
D) குறிகூறல் (Divination)

109. உள்ளுர்க்காரன் பேய்க்குப்பயப்படுவான், வெளியூர்க்காரன் தண்ணிக்குப் பயப்படுவான் என்பது:

A) உரைக்கூற்று B) பழமரபு
C) விடுகதை D) பழமொழி

110. ‘ழ’ சிற்றிதழ் தொடங்கியவர்:

A) சிற்பிபாலசுப்பிரமணியம் B) ஆத்மாநாம்
C) மீ.ராசேந்திரன் D) மனுஷ்யபுத்திரன்

111. ‘இந்திய ஒப்பிலக்கியம்’, காலாண்டுச்செய்தியிதழின் ஆசிரியர்

A) அ.அ.மணவாளன் B) ரெங்கநாதன்
C) அ.பிச்சை D) இரா.மணிகண்டன்

112. பொருத்துக:

a.பாரதியும் வள்ளத்தோளும் 1.க.சிவத்தம்பி
b.ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம் 2.சிற்பி பாலசுப்பிரமணியம்
c.இலக்கியமும் கருத்துநிலையும் 3.கா.செல்லப்பன்
d.ஒப்பிலக்கியம் கொள்கைகளும் செயல்முறைகளும் 4.வை.சச்சிதானந்தன்

A) a-1, b-2, c-3, d-4 B) a-3, b-1, c-4, d-2
C) a-4, b-3, c-2, d-1 D) a-2, b-4, c-1, d-3

113. கி.மு.நாலாம் நூற்றாண்டு முதல்ஐகார வடிவம் அமைந்த கல்வெட்டு

A) கழுகுமலைக்கல்வெட்டு B) யானைமலைக்கல்வெட்டு
C) திருநாதர் குன்றம் கல்வெட்டு D) அரிட்டாபட்டி கல்வெட்டு

114. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் நூலின் ஆசிரியர்:

A) மு.உலகநாதன் B) செ.வை.சண்முகம்
C) மா.இராசமாணிக்கனார் D) தி.நா.சுப்பிரமணியன்

115. ராபர்ட் கால்டுவெல்லுக்கு முன்னரே தென்னிந்தியக்கிளை மொழிகள் என்ற கருத்தாக்கம் தந்தவர்

A) ஆர்.இ. ராபர்ட் B) ஆர்.லீச்
C) ஜான் பெர்சிவல்ப்ரே D) எல்லீஸ்

116. ஆராய்ந்தெழுதுக

1. எமனோவின் பெரும்பாலான கருத்துகள் திராவிட மொழிகளிலுள்ள ஒலியன்களின் ஒப்பாய்வே
2. டி.பர்ரோ, மூலத்திராவிட ஒலிகளான ச,ழ,ற,ள முதலியவை பெங்கோ, கோண்டி, குவி மொழிகளில் அமைந்துள்ள மாற்றங்களை விவாதிக்கிறார்
3. பி.எச்.கிருஷ்ணமூர்த்தி தமிழ்மொழியை அடிப்படையாக்கித் திராவிட மொழிகளின் ஒலியன்களை ஒப்பிடுகிறார்.
4. திராவிட மொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியை கமில்சுவலபில் உருவாக்கினார்.

A) 1,2 சரி B) 3,4 சரி
C) 1,2,3சரி D) அனைத்தும் சரி

117. .யான், ஞாய், தாய் என்ற பெயர்கள்

A) தன்மையிடப் பெயர்கள் B) முன்னிலையிடப்பெயர்கள்
C) படர்க்கையிடப்பெயர்கள் D) சுட்டுப்பெயர்கள்

118. தாமரை, வெள்ளம், ஆம்பல் எனத் தொல்காப்பியம் குறிப்பவை

A) மலர்கள் B) சிற்றெண்கள்
C) நுண்மை D) பேரெண்கள்

119. அவர்தான் இங்கு வந்தார் என்ற தொடரில் ‘தான்’ என்பது

A) அசை அழுத்தம் B) இசைத்திரிபு
C) ஒலிப்பு ஊற்றம் D) தொடரிசை

120. ஆராய்ந்தெழுதுக:

1. ஒருவேர்ச்சொல்லைக்கொண்டது தனிச்சொல்
2. தனிச்சொல்லில் வேர்ச்சொல்லோடு விகுதிகளும் ஒட்டுகளும் வரலாம்.
3. இரண்டு அல்லது மேற்பட்ட பெயர்கள் ஒரு சொல் போல ஒட்டிவருவது தொகைச்சொல்.
4. இவ்வகையல்லாமல் ஒன்றுக்கு மேற்பட்ட வேர்ச்சொற்களைக்கொண்டமைவது கூட்டுச்சொல்.

A) 1,2 சரி B) 2,3 சரி
C) 3,4 சரி D) அனைத்தும் சரி